# பெரியாரின் மண்! அண்ணாவின் பூமி – கலைஞரின் கோட்டை – தளபதியின் தமிழ்நாடு! பிளவுபடுத்தும் சக்திகளுக்கு இங்கே இடமில்லை!

# விளிம்புநிலை மக்களின் வளர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்துகிறார் முதல்வர்!

## சட்டப்பேரவையில் – ஆதிதிராவிடர்– பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலுரை!

**சென்னை, ஏப்.30-**

**சட்டப்பேரவையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் பதிலுரையாற்றுகையில் விளிம்புநிலை மக்களின் வளர்ச்சிக்காக அதிக கவனம் செலுத்தி வருகிறார் நமது முதலமைச்சர் என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலுரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, இரும்பு கோட்டையாக மாற்றிய, இருபெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன். பெரியாரால் தயாரிக்கப்பட்டு, அண்ணாவால்சீர்ப்படுத்தப்பட்டு, கழக உடன் பிறப்புகளால் வலுப்பெற்ற ஒப்பற்றத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சுயமரியாதை சுடர் ஒளி, இணமான பேராசிரியர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டமிடும் திறன், குறிக்கோளில் தெளிவு, செயல்பாடுகளில் துல்லியம், சிக்கல்களுக்கு அஞ்சாத மனம், தெளிவான நோக்கம், முன்னோடி சிந்தனை, நேர்மை கலந்த பொறுப்புணர்வு, புதிய பாதைகளை வகுக்கும் பண்பு, அணிதிரட்டும் தலைமைத்துவம், இவை அனைத்துக்கும் இலக்கணமாய் இருந்து, திராவிட மாடல் ஆட்சியை வழிநடத்தும் ஈடு இணையற்ற நமது கழக தலைவர் முதலமைச்சர் அவர்களை பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கழகத்தின் கொள்கைத் தூணாக, கழகத் தலைவருக்கு துணையாக, துடிப்புடனும், துணிவுடனும் செயல்படும் துணை முதலமைச்சர் உதய் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவை முன்னவர், பேரவைத் தலைவர், பேரவை துணைத் தலைவர், சட்டமன்ற கொறடா, அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பு வணக்கங்கள். மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றதிலிருந்து கழகத்தின் உடன் பிறப்புகளுக்கான வாய்ப்புகள், உதவிகள், ஊக்கங்களை வழங்கி தலைசிறந்த தலைமைப் பண்புகளோடு வழிநடத்திச் செல்லும் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் அவர்களுக்கும், என்னை ஈன்றெடுத்த தாய், தந்தை உட்பட அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும், அருமை நண்பர்களுக்கும் நன்றி கலந்த வணக்கங்கள். எனது இராசிபுரம் தொகுதியைச் சார்ந்த அனைத்து கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், அன்பார்ந்த தொகுதி பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக அரசியலில் பல நாடுகளில் பல கட்சிகள் பல்வேறு காரணங்களுக்காக தொடங்கப்பட்டுள்ளது. ஆனால், அனைவரும் அனைத்தையும் பெறவேண்டும் என்பதற்காக மிக முக்கியமாக, ஒடுக்கப்பட்டோர் தன் உரிமைகளைப் பெறவேண்டும் என்பதற்காகவே துவங்கப்பட்ட இயக்கம்தான் தி.மு.க. (மேசையைத் தட்டும் ஒலி) நீதிக் கட்சி தொடங்கி பல தலைவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடினார்கள். குரல் கொடுத்தார்கள். அந்த வரிசையில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை ஒவ்வொரு நிலையிலும் உயர்த்தியவர் நம்மை என்றும், இன்றும் வழிநடத்திக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தனது 33-வது வயதில், நங்கவரம் கிராமத்தைச் சார்ந்த ஒடுக்கப்பட்ட விவசாயிகளுக்காக போராடி, உரிமைகளை பெற்று தந்ததில் தொடங்கி, முதலமைச்சராக பணியாற்றிய காலங்கள் வரை, மாநிலத்தின் வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் வசிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, பல மகத்தான திட்டங்களைச் செயல்படுத்தினார். முற்போக்கு தன்மை கொண்ட முக்கியமான பல நலத் திட்டங்களை வழங்கினார்.

ஒரு மனிதனின் வாழ்க்கையில், அவனுடைய பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடைப்பட்ட காலங்களில் நடைபெறும் சம்பவங்கள்தான் சாட்சியாக அமைகின்றது. மனிதனாக பிறந்த எவருக்கும் துன்பங்கள் இல்லாமல் வாழ்க்கை இருக்காது. ஆனால், சுயமரியாதை இழந்து, எந்தவொரு அடிப்படை வசதிகள் இல்லாமல் குறிப்பாக உண்ண உணவில்லாமல், உடுத்த உடையில்லாமல், தங்க வீடில்லாமல், வேலைவாய்ப்பு இல்லாமல், இருந்த கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் அவர்கள் அனைத்து உரிமைகளையும் படிப்படியாக பெற்றுத் தந்து, அவர்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



### தந்தை பெரியார் சமத்துவபுரம் உருவாக்கிய கலைஞர்!

அதனால்தான், “Kalaignar was not just a leader of sympathy” ஏதோ ஒடுக்கப்பட்டோரின் அவல நிலையை அறிந்து, அனுதாபப்படுகிற தலைவர் அல்ல. ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையிலிருந்து உணர்வது மட்டுமல்ல, உணர்ந்த நிலை மாற்றிட, அனைத்து முயற்சிகளும் நடவடிக்கைகளும் எடுத்து, அவர்களின் வாழ்வில் மாற்றங்களை தந்த மகத்தான தலைவர். “Kalaignar was a leader of empathy” எந்த தலைவரும் சிந்திக்காததையும் சிந்தித்தார், செயல்படுத்தாததையும் செயல்படுத்தியவர். குறிப்பாக, பட்டியலின மக்களுக்காக, பல்வேறு பயனுள்ள திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்.

வறுமை ஒழிப்பு திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி, பட்டினி சாவு இல்லாத மாநிலமாக மாற்றியவர். குடிசையில் வாழ்ந்து வந்த மக்களை, concrete வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு நகர்த்தியவர். பலர், சாதி வாரியாக பிரிந்து இருப்பதை போக்க, ஊர் தெரு, சேரி என்று தனித்தனியே வாழ்கிற வேற்றுமையை கலைக்க, சாதிய சிந்தனைகளை கரைக்க, ஒன்றாக ஒற்றுமையாக வாழ, தந்தை பெரியாரின் பெயரில் “சமத்துவபுரங்கள்” என்ற நகரமைப்பைக் கட்டியவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஒடுக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்காக இலவச bus pass வழங்கியவர். கலை அறிவியல் கல்லூரிகளில் பட்டியலின மாணவர்கள் சேருவதற்கு, பள்ளியில் தேர்ச்சி பெற்றால் போதும் என்ற உத்தரவு. தொழில் கல்வி படிக்க விரும்பும் பட்டியலின பழங்குடியினரின் முதல் வாரிசின் செலவை அரசே ஏற்கும் என்ற அரசாணை, சமூகங்களுக்குள்ளேயே இயல்பாக மணம்முடிக்கும் கலாச்சாரம் இருந்தாலும், சமூக வேறுபாடுகள் கலைய, அச்சிந்தனையை நீர்த்துப்போக முயற்சிக்கும் வகையில் கலப்பு திருமணத்திற்கு ஊக்கத்தொகை.

## கிராமப்புற – நகர்ப்புற குடியிருப்புகளில் அயோத்திதாசபண்டிதர் – அறிவுசார் மையங்கள்!

அம்பேத்கர் பிறந்த இடமான மகாராஷ்டிரா மாநிலத்திலேயே அவர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்க எதிர்ப்பு இருந்தபோதே, அண்ணல் அம்பேத்கர் அவர்களை பெருமைப்படுத்தும் விதமாக சென்னையில் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம். அறங்காவலர் மற்றும் கூட்டுறவு நிர்வாக பொறுப்புகளில் பட்டியலினத்தவரை இடம்பெற செய்தவர். பட்டியலின வகுப்பை சார்ந்த வரதராஜன் அவர்களை உயர் நீதிமன்ற நீதிபதியாக உயர்த்தியவரும் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பட்டியலின மக்களை நிர்வாகப் பொறுப்புகளிலும், அதிகார அமைப்புகளிலும் இடம்பெற செய்து இருந்தாலும், ஆண்டவன் அருகில் செல்ல முடியுமா? என்றிருந்த நிலையை மாற்றி, கோயில் கருவறைக்கு உள்ளேயே செல்ல முடியும், ஏன்! அர்ச்சனையையும் செய்ய முடியும் என்று, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணைக்கு வித்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை செயல்படுத்தியவர் நமது முதலமைச்சர் அவர்கள். “Only a life lived for others is a life worthwhile” மற்றவர்களுக்காக வாழும் வாழ்க்கைதான் அர்த்தமுள்ள வாழ்க்கை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் மற்றவர்களுக்காக வாழ்ந்து, இந்திய அரசியல் வானில் மங்காமல் உலா வரும் ஒரு ஒளிச்சுடர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நீட்சியாக, நமது திராவிட மாடல் ஆட்சியில் விளிம்புநிலை மக்களுக்காக, பல்வேறு சிறப்பு வாய்ந்த முன்னெடுப்புகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைமூலம் செயல்படுத்தி இருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

இன்றைய, எனது உரையில் இத்துறை சாதித்த பல சாதனைகளை கல்வி மேம்பாடு, மேம்படுத்திய உட்கட்டமைப்பு, வாழ்வாதார மேம்பாடு, சமூக மேம்பாடு, கலை மற்றும் கலாச்சாரம் என்ற ஐந்து தலைப்பின்கீழ் சுருக்கமாக எடுத்துரைக்க உள்ளேன்.

### கல்வி மேம்பாடு

முதலமைச்சர் அவர்களை பொறுத்தவரையில் கல்வியை தன் கண்களாக பாவித்து, அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார். அந்த கண்களுக்கு கூடுதலாக கண்ணாடி போடும் விதமாக, பட்டியலின பழங்குடியின மாணாக்கரின் கல்விக்கு கூடுதல் முக்கியத்தும் அளித்து பல முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

பத்து தலைமுறையின் ஏழ்மையை, ஒற்றைத் தலைமுறையிலேயே மாற்றும் ஆயுதம், கல்வி மட்டுமே நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எல்லோருக்கும் எல்லாம் என்ற நல்லாட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர் கல்வி மேம்பாட்டிற்காக தனிக்கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில் ஏற்கனவே இருந்த கல்வி சார்ந்த திட்டங்களில் இருந்த குறைபாடுகளை கண்டறிந்து, அந்த குறைபாடுகளை அகற்றி, அதிக மாணாக்கர்கள் பயன்பெறும் விதமாக சீரமைத்துள்ளோம். உதாரணத்திற்கு, வருமான உச்சவரம்பை அதிகப்படுத்தி, பல்வேறு மாணாக்கருக்கு வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்தல், வழங்ககூடிய உதவித் தொகையை அதிகரித்தல், அதே திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்குதல் மற்றும் தற்காலத்திற்கு ஏற்ப பல்வேறு சிறப்புமிக்க புதிய திட்டங்களை அறிமுகப் படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் 1,458 பள்ளிகளில் ஒரு இலட்சத்து ஆயிரத்து எண்ணூற்று இருபத்து இரண்டு மாணாக்கர் கல்வி பயின்று வருகிறார்கள். Pre-Matric மற்றும் Post-Matric வகுப்புகளில் பயிலும் 12 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிடர், கிறித்துவ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகையாக ஓராண்டிற்கு மட்டும் ரூபாய் 600 முதல் 700 கோடி வரை வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

### அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டம்!

ஒன்றிய அரசின் Samagra Shiksha Abhiyan எனும் திட்டத்தின்கீழ், நம் மாநிலத்தின் கல்விக்காக வழங்க வேண்டிய ரூபாய் 2,152 கோடியை ஒன்றிய அரசு தற்போது வழங்க மறுக்கிறது. அதேபோல், பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளில் 2,478 மாணாக்கர் பயின்று வருகின்றனர். ஒரு வருடத்திற்கு ஒரு மாணவருக்கு 1 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசின் மும்மொழி கொள்கையை நடைமுறைப்படுத்தினால்தான், முழு கல்விச் செலவை வழங்க முடியும் என்று தெரிவித்து, 60 சதவிகித பங்களிப்பை மட்டுமே வழங்கி வந்தார்கள். நமது முதலமைச்சர் அவர்கள், இருமொழிக் கொள்கையில் உறுதியோடு இருந்து, எந்தச் சூழ்நிலையிலும், எக்காரணத்தைக் கொண்டும், மாணாக்கரின் கல்வி பாதிக்கக் கூடாது என்ற உயரிய எண்ணத்தில், ஒன்றிய அரசு வழங்க மறுத்த 40 சதவிகித நிதியான ஆண்டுக்கு ரூபாய் 11 கோடியையும் வழங்கியதை இம்மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, சிறப்பு வாய்ந்த அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வித் திட்டத்தின்கீழ், வெளிநாட்டிற்குச் சென்று முதுகலை மற்றும் முனைவர் ஆராய்ச்சிக் கல்வி கற்பதற்கான உதவித் தொகை பெறுவதற்கு, கடந்த காலங்களில் வருமான உச்சவரம்பு ரூபாய் 3 இலட்சமாக இருந்தபோது, மாணாக்கர் எவரும் பெரிதளவில் பயனடையவில்லை. தற்போது நமது முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அமைந்தபிறகு, வருமான உச்சவரம்பை அதிகப்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 12 லட்சம் வரை வருமானம் உச்சவரம்பு உள்ள மாணாக்கருக்கு உதவித் தொகையாக ரூபாய் 24 இலட்சமும், ரூபாய் 8 லட்சம் வரை வருமான உச்சவரம்பு உள்ள மாணாக்கருக்கு உதவித் தொகையாக ரூபாய் 36 இலட்சமும் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், கடந்த நான்காண்டுகளில், 210 மாணாக்கருக்கு ரூபாய் 66 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் பெரும் பயனாக நடப்பு நிதியாண்டில் 65 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் கொண்டாடப்பட்ட டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாளான சமத்துவ நாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பேரன் மரியாதைக்குரிய பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள், அயலக உயர் கல்வி திட்டத்தின்கீழ் பயன்பெற்ற மாணாக்கர்களை சந்தித்த போது, நமது திராவிட மாடல் ஆட்சியின் செயல்பாடுகளை மனமுவந்து பாராட்டி, தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் ஆகியோரின் குடும்பத்தைச் சார்ந்த மாணாக்கருக்கு பட்டப்படிப்பு படிப்பதற்காக தேசிய நிதி மேம்பாட்டுக் கழகங்களிலிருந்து குறைந்த வட்டியில் கல்வி கடன் தாட்கோமூலம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் கல்விக் கடனாக 27 மாணாக்கர்களுக்கு ரூபாய் 85 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில், நமது திராவிட மாடல் ஆட்சியில் 382 மாணாக்கருக்கு ரூபாய் 12 கோடியே 66 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலங்களில் முனைவர் பட்டப்படிப்புக்கு கல்வி உதவித் தொகையாக ஒரு மாணவருக்கு ரூபாய் 50 ஆயிரம் வீதம் 1,200 மாணாக்கருக்கு ரூபாய் 6 கோடி வழங்கப்பட்டு வந்த நிலையில், நமது திராவிட மாடல் ஆட்சியில் பயன்பெறும் மாணாக்கரின் எண்ணிக்கையை 1,200-லிருந்து 1,600-ஆகவும், கல்வி உதவித் தொகையை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து 1 இலட்சமாகவும் உயர்த்தி, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 16 கோடி கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

## அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.65 கோடி ஒதுக்கீடு!

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் 1,331 விடுதிகளிலும் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் 49 விடுதிகளிலும் ஒரு இலட்சத்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்து எட்டு மாணாக்கர் தங்கி பயின்று வருகின்றனர். வயிற்றுப் பசியோடு இருந்தால், கல்வியில் கவனம் செலுத்த முடியாது என்பதற்காகவே காலை உணவு திட்டத்தை நாட்டிலேயே முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, இந்தத் துறையால் நடத்தப்படும் விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கருக்கு தினந்தோறும் உண்ணும் உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், கடந்த காலங்களில் பள்ளி மாணாக்கருக்கு மாதம் ரூபாய் 1,000/- என வழங்கப்பட்டு வந்த உணவு மானியத்தை நமது திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, ரூபாய் 1,400/- ஆக உயர்த்தியும், (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரி மாணாக்கருக்கு வழங்கிய உணவு மானியத்தை ரூபாய் 1,100/-லிருந்து ரூபாய் 1,500/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

மிக முக்கியமாக, முக்கிய விழா நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவுக் கட்டணம் இரட்டிப்பாக்கப்பட்டு, பள்ளி மாணாக்கருக்கு 40 ரூபாயும், கல்லூரி மாணாக்கருக்கு 80 ரூபாயும் வழங்கப்படுகிறது. மேலும், தரமான, சுவையான உணவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்த ஒருங்கிணைந்த சமையலறைகள் மூலமாக உணவு தயாரிக்கப்பட்டு, ‘அமுத சுரபி’ என்கின்ற செயலிமூலம் கண்காணிக்கப்படுகிறது.

அடிப்படை தேவையான பொருட்களின் செலவினத்தை இரட்டிப்பாக்கி பள்ளி மாணாக்கருக்கு ரூபாய் 50-லிருந்து 100-ஆகவும், கல்லூரி மாணாக்கருக்கு ரூபாய் 75-லிருந்து 150-ஆகவும் உயர்த்தி வழங்குகிறோம். நம்முடைய ஆட்சியில் கல்விச் சுற்றுலாவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தலைசிறந்த கல்வி நிறுவனங்களான IIT-Chennai, Agri University-Coimbatore, PSG-Coimbatore, VIT-Vellore போன்ற கல்வி நிறுவனங்களுக்கு அழைத்து செல்கிறோம். பல்துறைச் சார்ந்த பரந்துப்பட்ட அறிவை இளைய சமுதாயம் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் மாணாக்கர்களின் கனவை நனவாக்கும் வகையில்பல புதிய முயற்சிகளை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தி வருகிறோம். அந்த வகையில் பள்ளி மாணாக்கருக்கு உயர் கல்வி குறித்த வழிகாட்டு ஆலோசனைகளை வழங்கக் கூடிய “என் கல்லூரி கனவு”, “தொட்டு விடும் தூரத்தில் இலக்கு”, “எனக்கு ஒரு கனவு இருக்கிறது” போன்ற சிறப்பு பயிலரங்குகள் நடத்தப்பட்டன. கல்லூரி மாணாக்கருக்கு கலை, திறன் மேம்பாட்டு பயிற்சி, உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த “களம் ஆடு” என்கின்ற கலைத்திறன் முகாம்களை அறிமுகப்படுத்தி உள்ளோம்.

### கற்றல் இனிதே - நல்லோசை

விடுதிகளில் தங்கி படிக்கும் மாணாக்கர்களுக்கு பல்வகை திறமைகளை வளர்த்துக்கொள்ள “கற்றல் இனிதே”, “நல்லோசை” போன்ற கல்வி திறன் சார்ந்த பயிற்சிகள் மற்றும் இணையவழி நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இறுதி ஆண்டு சட்டம் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கருக்கு உட்பயிற்சி (Internship) உதவித் தொகையும், உயர் மதிப்பெண் பெற்ற கல்லூரி மாணாக்கருக்கு உயர் திறன் ஊக்கத்தொகையும் (Internship incentive) வழங்கப்படுகிறது. பழங்குடியினரின் வாழ்வியல், மொழி, கலாச்சாரம் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வு மேற்கொள்ளும் இளம் வல்லுநர்களை ஊக்குவிக்க புதிய திட்டமான “தொல்குடி புத்தாய்வுத் திட்டம்” மூலமாக ஊக்கத்தொகையுடன் விருதும், சான்றிதழும் வழங்கப்படுகிறது.

பழங்குடியினர் நலத் துறையால் வழங்கப்பட்ட சிறப்பு நுழைவுத் தேர்வு பயிற்சிகள் மூலம், முதல்முறையாக பழங்குடியினர் இனத்தை சேர்ந்த 7 மாணாக்கர் திருச்சி (NIT-லும், National Institute of Technology), 2 மாணாக்கர் அரசு மருத்துவக் கல்லூரியிலும், 4 மாணாக்கர் சென்னை மற்றும் பெங்களுர் NIFT-லும்(National Institute of Fashion Technology), ஒரு மாணவர் திருச்சி தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திலும் படித்து வருகிறார்கள். இந்த சாதனையானது முதலமைச்சர் அவர்கள் விளிம்பு நிலையில் இருக்கும் பழங்குடியினர் மக்களின் கல்விக்காக வழங்கக்கூடிய முக்கியத்துவத்தை பறைசாற்றும் விதமாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உட்கட்டமைப்பு வசதிகள். பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை முன்னெடுத்து செல்வதையும், அதன் எதிர்கால வளர்ச்சிக்கு வலுசேர்ப்பதிலும், மிக முக்கியமானது உட்கட்டமைப்பு. அதற்கு ஏற்றாற்போல் முதலமைச்சர் அவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளின் வகுப்பறைகள், சுற்றுச்சுவர் போன்ற பல அடிப்படைப் பணிகளுக்காக கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 392 கோடி மதிப்பீட்டில் 600 பணிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு, 393 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் 1,688 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், அனைத்து விடுதிகளிலும் மாணாக்கர் பாதுகாப்பை உறுதிசெய்ய CCTV மற்றும் Biometric வசதிகள் ரூபாய் 27 கோடி செலவில் பொறுத்தப்பட்டுள்ளது.

### பிரம்மாண்டமான எம் சி. ராஜா விடுதி: முதல்வர் திறந்து வைத்தார்!

ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர்களுக்காக சென்னை நந்தனம் பிரதான சாலையில், பிரமாண்டமான முறையில், பிரமிக்க வைக்கும் வகையில், பல்வேறு நவீன வசதிகளுடன் MC ராஜா கல்லூரி விடுதி ரூபாய் 44.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நமது திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர் நலன் கருதி கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 525 கோடி மதிப்பீட்டில், 10,040 மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், 74 புதிய விடுதிகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, 19 புதிய விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 55 விடுதிகளுக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் முடிக்கப்படும். வீடற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் கடந்த நான்காண்டுகளில் ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 519 பயனாளிகளுக்கு இ-பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூபாய் 72,000-லிருந்து, ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டு, கிராமப்புறத்தில் வசிப்பவர்களுக்கு 3 சென்ட் நிலமும், நகராட்சியில் வசிப்பவர்களுக்கு ஒன்றரை சென்ட் நிலமும், மாநகராட்சியில் குடியிருப்பவர்களுக்கு ஒரு சென்ட் நிலமும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு மட்டும் 1,465 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இதற்காக ரூபாய் 26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வன உரிமைச் சட்டத்தின் படி, பழங்குடியினர் பயன்பெறும் வகையில் 15,408 தனி நபர்களுக்கும், 720 பல்வேறு வகை சமூக உரிமையின் கீழ் Individual Rights & Community Rights வழங்கப்பட்டுள்ளது. நமது திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் முதலமைச்சர் அவர்களால் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பட்டியலின மக்களை குறிக்க ஆதி திராவிடர் என்னும் சொல்லை முதன்முதலாக பயன்படுத்திய அயோத்திதாச பண்டிதர் அவர்களை சிறப்பிக்கும் வகையில், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் என பெயரிடப்பட்டு ஆண்டுக்கு ரூபாய் 200 கோடி வீதம் ஐந்தாண்டுகளில் ரூபாய் 1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த இரண்டாண்டுகளில் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டிலான 1,700-க்கும் மேற்பட்ட உட்கட்டமைப்பு பணிகள் முடிவுற்று, ரூபாய் 230 கோடி மதிப்பீட்டில் 2,000-க்கும் மேற்பட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் 280 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மக்கள் தங்களின் இல்லங்களில் நிகழும் நிகழ்ச்சிகளை சிறப்பாக கொண்டாட, இடவசதியின்றி தவித்து வரும் சூழலை கருத்தில்கொண்டு, தங்களின் குடும்பத்தில் ஒருவராக இருந்து, அந்நிகழ்ச்சிகளை சிரமமின்றி நடத்த ஏதுவாக, முதலமைச்சர் அவர்கள், ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழும் பல்வேறு பகுதிகளில் சமுதாயக்கூடங்களை கட்டித்தந்து, இம்மக்களின் குடும்ப விழா சிறப்பாக நடைபெற வழிவகை செய்துள்ளார்கள். நமது திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், ரூபாய் 77 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டில், 93 சமுதாயக்கூடங்கள் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டு, அதில் 35 சமுதாயக்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில், பழங்குடியின குடியிருப்புகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி தருவதற்காக “தொல்குடி என்கின்ற சிறப்புத் திட்டம்” ஆண்டிற்கு ரூபாய் 250 கோடி வீதம் 4 ஆண்டுகளில் ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மணியடிக்கப்பெற்றது)

இத்திட்டத்தின் மூலம் பழங்குடியினர் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் பன்னோக்கு மையங்கள் கடந்த காலங்களில் 800-லிருந்து 900 சதுர அடியில் குறைந்த பரப்பளவில் ரூபாய் 18.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது. நமது திராவிட மாடல் ஆட்சியில் 2,000 சதுர அடி பரப்பளவில் பன்னோக்கு மையங்கள் தலா ரூபாய் 60 இலட்சம் வீதம் கட்டப்பட்டுள்ளது.

ஆதி திராவிட தொழில்முனைவோருக்காக ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈங்கூர், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள முதலிபாளையம் ஆகிய இரண்டு இடங்களில் தொழிற்பேட்டைகளுக்காக ரூபாய் 50 கோடி

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்